# கீழக்கரை நகர்மன்ற 30.12.2019–ம் தேதிய கூட்டத்தின்நடவடிக்கைகள்

## பொருள் :1

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 21 வரையிலான சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, காலிமனைவரி, தொழில்வரி உரிமக்கட்டணம் ஆகிய வரி மற்றும் வரியில்லா இனங்களை 2019–2020ம் ஆண்டிற்குள் 100 சதவீதம் வசூல் செய்யும் பொருட்டு தீவிர வசூல் நடவடிக்கை மேற்கொள்ள ஜனவரி–2020 முதல் மார்ச்–2020 (30.03.2020) தேதி வரை ஆட்டோ மூலம் மைக்செட் விளம்பரம் செய்வதற்கும் மற்றும் ப்ளக்ஸ் போர்டு பேனர்கள் அச்சிட்டு விளம்பரம் செய்வதற்கும் உத்தேச செலவினமாக ரூ.1,80,000/–க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.743/2016/அ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

1. இந்நகராட்சியில் 225.32 இலட்சம் நிலுவை உள்ளதால் தீவிர வசூல் செய்யும் பொருட்டு ஆட்டோ மூலம் மைக்செட் விளம்பரம் மற்றும் ப்ளக்ஸ் போர்டு பேனர்கள் அச்சிட்டு விளம்பரம் செய்வதற்கான உத்தேச செலவினங்கள் ரூ.1,80,000/– இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஆட்டோ மைக்செட் மூலம் விளம்பரம் செய்வதற்கும் ப்ளக்ஸ் போர்டு பேனர்கள் அச்சிட்டு விளம்பரம் செய்வதற்கும் உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.664அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :2

கீழக்கரை நகராட்சி – பொதுசுகாதார பிரிவில் டெஙகு கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு 40 மஸ்தூர் பணியாளர்களை கொண்டு 21 வார்டுகளிலும் மதுரை, அன்னை கம்சலை கல்வி அறக்கட்டளை தொண்டு நிறுவனம் மூலம் பணிகள் பார்த்து வரப்பட்டது. தற்போது இந்நகராட்சி துப்புரவு ஆய்வரின் குறிப்புரையின் படி இந்நகர் பகுதிகளில் அதிகளவில் டெஙகு பாதிப்பு ஏற்படுவதாலும் மேற்படி தொண்டு நிறுவனம் அதிக தொலைவில் இருப்பதாலும் பணிகளை சரிவர செய்யாத காரணத்தினாலும் தொண்டு நிறுவனத்திற்கு வழஙகப்பட்ட உத்திரவு 31.12.2019 உடன் முடிவடைவதாலும் இம்மாவட்டத்திற்குள் உள்ள ஏதாவது ஒரு தொண்டு நிறுவனம் மூலம் பணிகள் பார்த்துவர நடவடிக்கை மேற்கொள்ளலாம். என தெரிவித்துள்ளதால் வருகின்ற 01.01.2020 முதல் 31.12.2020 வரை இராமநாதபுரம் நேஷனல் ஃபார்ம்பார் பப்ளிக் ரெகபிளிடேஷன் அன்ட் இன்டர்கிரேடட் டெவலப்மெண்ட் நிறுவனத்திற்கு பணிகள் பார்த்து வர உத்திரவிட்டும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ 50,20,000/–க்கு மேற்கொள்ள மன்ற அனுமதி பெற மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண் 457/2019/எச்1)**

**அலுவலகக்குறிப்பு**

1. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் தொற்று நோய் தடுப்பு மாவட்ட ஒருஙகிணைப்பு குழு கூட்டம் Q3/54942/2015 நாள்.12.09.2016–ன்படி 40 மஸ்தூர் (DBC) பணியாளர்களை கொண்டு இராமநாதபுரம் நேஷனல் ஃபார்ம்பார் பப்ளிக் ரெகபிளிடேஷன் அன்ட் இன்டர்கிரேடட் டெவலப்மெண்ட் நிறுவனத்திற்கு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர், உத்திரவில் கண்டுள்ள தினக்கூலி விலைவிகிதம் ரூ 345/– வீதம் ஒராண்டுக்கு வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.665அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :3**

**தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TURIP) 2019–20**ன் கீழ் இந்நகராட்சிப் பகுதிகளில் ரூ.200 இலட்சத்திற்கு சாலைப் பணிகள் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.626, நாள்.27.09.2019–ன்படி, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.17349/2019/E3 நாள்.18.10.2019–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25039–10/2019/DO2 நாள்.18.10.2019–ன் படி தொழில்நுட்ப அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்படி மேற்காணும் பணிக்கு 27.11.2019–ந்தேதி மின்னணு **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** சென்னை, அகார்ட் அட்வர்டைசிங் நிறுவனம் மூலம் 26.10.2019–ம் தேதி ஒரு ஆங்கில தினசரி நாளிதழ் மற்றும் தமிழ் தினசரி நாளிதழில் மாநில அளவில் அனைத்து பதிப்புகளிலும் (All Edition in the State) பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ.75,758/–க்கு பட்டியல் எண்.AAA/0407/19-20 நாள்.29.10.2019–ன்படியானது இந்நகராட்சிக்கு 29.11.2019–ந் தேதி வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் பட்டியல் ரூ.75,758/–மட்டும் சென்னை, அகார்ட் அட்வர்டைசிங் ஏஜென்ஸிக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.
**[கோப்பு எண்.455/2019/இ1]**

**அலுவலகக் குறிப்பு:**

சென்னை, அகார்ட் அட்வர்டைசிங ஏஜென்ஸி விளம்பர கட்டணம் ரூ.75,758/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.666அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :4**

இந்நகராட்சியின் 2018–2019 ஆம் ஆண்டுக்குரிய இயல்நிலை கணக்குகள் வரவு செலவினங்கள் (Receipt & Expenditure) ஐந்தொகை கணக்குகள் (Trail Balance), இருப்பு நிலை விபரம் (Balance Sheet) ஆகியவைகள் புதிய ஏழு இலக்க முறையில் (CWBS) தயார் செய்து தணிக்கைக்கு அளிக்கும் பொருட்டு நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ABA அமைப்புக்கான ஆலோசகர் (Consultant for Municipal & Town Panchayat ABA System), திரு.வி.சீனிவாசன் எம்.காம். சி.ஏ, கோவில்பட்டி என்பவருக்கு கட்டணம் ரூ. 35,000/– மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.271/2019/இ1)**

**அலுவலக குறிப்பு**

நிர்வாக நலனை கருத்தில் கொண்டு ரூ.35,000/– இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.667அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :5</u>**

இந்நகராட்சிப் பகுதிகளில் சேதமடைந்துள்ள சாலைகளை சீரமைக்கும் பொருட்டு, சாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு ரூ.200.00 இலட்சத்திற்கு **தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TURIP) 2019–20**ன் கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.626, நாள்.27.09.2019–ன்படி, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.17349/2019/E3 நாள்.18.10.2019 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி 27.11.2019–ம் தேதி மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் ஒப்பந்தகாரர்களின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப கூறல் (Technical Bid) ஒப்பந்த ஆவணத்தின்படி நிபந்தனைகளை நிறைவு செய்திருப்பதாக தொழில்நுட்ப கூராய்வு குழுவால் ஆய்வு செய்து 12.12.2019–ந் தேதி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்க்காணும் விலைக்கூறல் (Price Bid) 18.12.2019-ந் தேதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**[கோப்பு எண்.455/2019/இ1]**

**<u>மதிப்பீடு ரூ. 200 லட்சம்</u>**

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்ததாரரின் ஒப்பந்ததொகை ரூபாய் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி 14–வது வார்டு மாதிஹூர் ரசூல் சாலை முதல் மாலாங்குண்டு வரை மற்றும் இந்நகராட்சி பள்ளமோர்க்குளம் புதிய உரக்கிடங்கிற்கு கிழக்கு கடற்கரை சாலை இணைப்பிலிருந்து தார்ச்சாலை அமைக்கும் பணிகள் | திரு.எம்.கே. திருமுருகன், எண்.27, வடக்கு புதுத்தெரு, இராமநாதபுரம் | ரூ .201,98,361/– 4.97% மதிப்பீட்டு தொகையைவிட கூடுதலில் குறைவு |
| | | திரு.என்.ஜீவானந்தம், எண்.18A, மறவர் தெரு, இராமநாதபுரம். | ரூ .205,98,179/– 7.05% மதிப்பீட்டு தொகையைவிட கூடுதலில் அதிகம் |

**<u>அலுவலகக் குறிப்பு.</u>**

1. நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) தொகுதி 1 பகுதி பிரிவு 2.7.2–ல் பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டை விட 5 சதவீதம் வரை கூடுதலாக உள்ள நகர்மன்ற வரம்பிற்கு உட்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாகும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்படி ஒப்பந்தகாரர் மதிப்பீட்டு தொகையை விட 4.97% கூடுதலாக விலை விகிதம் கொடுத்துள்ளதை விலை குறைப்பு செய்து கொடுக்க கோரியதில், மூலப்பொருட்களின் விலை மார்க்கெட்டில் கூடுதலாக உள்ளதை சுட்டிக் காட்டி விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்ததின் அடிப்படையில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் (+) 4.97 சதவீதம் கூடுதலாக கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்.668அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :6</u>**

கீழக்கரை நகராட்சி அலுவலக கட்டிடத்தின் முன்புறம் உள்ள முகப்பு பகுதியின் மேற்கூரை மற்றும் ஜன்னல் பகுதியில் உள்ள Sunshade அடிப்பகுதி பழுதுகள் அனைத்தையும் சரி செய்யவும், அலுவலக கட்டிடம் முன்புறம் மற்றும் உட்புறங்களில் வர்ணங்கள் பூசும் பணி செய்வதற்கும்

மதிப்பீடு ரூ.4,500,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு 29.11.2019—ந்தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சி அலுவலக கட்டிடம் பழுதுகள் மற்றும் வர்ணம் பூசும் பணிக்கு 17.12.2019—ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி 2019—20** | | | | |
| 1. | நகராட்சி அலுவலக கட்டிடத்தின் முன்புறம் உள்ள முகப்பு பகுதியின் மேற்கூரை மற்றும் ஜன்னல் பகுதியில் உள்ள Sunshade அடிப்பகுதி பழுதுகள் அனைத்தையும் சரி செய்யவும், அலுவலக கட்டிடம் முன்புறம் மற்றும் உட்புறங்களில் வர்ணங்கள் பூசும் பணி மேற்கொள்ளுதல். | 4.50 | பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர், கீழக்கரை | ரூ.4,30,986/— 0.85% மதிப்பீட்டு தொகையைவிட குறைவு |
| | | | சி. பழனி ஒப்பந்ததாரர், கீழக்கரை | ரூ.4,41,178/— 1.49% மதிப்பீட்டு தொகையைவிட அதிகம் |

**(கோப்பு எண்.976/2019/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மதிப்பீட்டு தொகையை விட 0.85% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.பி. சிவக்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்.669 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் :7</u>

கீழக்கரை நகராட்சி புதிய பேருந்து நிலைய மாட்டுக் கொட்டகை கழிவு நீரேற்று நிலையத்தில் மழைநீர் மற்றும் கழிவுநீர் சேமிப்பு தொட்டிகளில் தேங்கியுள்ள மண்கள் (Silt) அப்புறப்படுத்தவும், கழிவுநீர் மோட்டாரை பழுது நீக்கம் செய்து அவற்றிற்கு புதிதாக செட் அமைக்கவும், கழிவுநீர் மோட்டார் அறை பகுதிகளில் புதிதாக பேவர் பிளாக் அமைக்கவும் மேலும் அப்பகுதியில் உள்ள வடிகால்களை ஆழப்படுத்தி மூடி அமைக்கும் பணி செய்வதற்கு மதிப்பீடு ரூ.4,80,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு 29.11.2019—ந் தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் செய்வதற்கு 17.12.2019—ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி 2019—20** | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சி புதிய பேருந்து நிலைய மாட்டுக் கொட்டகை கழிவு நீரேற்று நிலையத்தில் மழைநீர் மற்றும் கழிவுநீர் சேமிப்பு தொட்டிகளில் தேங்கியுள்ள மண்கள் (Silt) அப்புறப்படுத்துதல், மோட்டார் பழுது நீக்கம் செய்து செட் அமைத்தல், பேவர் பிளாக் அமைத்தல் மற்றும் அப்பகுதியில் வடிகால்களை ஆழப்படுத்தி மூடி அமைக்கும் பணி. | 4.80 | ஏ.ஆர்.டி.இ. என்டர்பிரைசஸ், 115–அம்பத்தூர் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் சென்னை–58 | ரூ. 4,68,612/– 0.32% மதிப்பீட்டு தொகையைவிட குறைவு |
| | | | சங்கிலிமாடன் ஹரிஸ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், தூவிபுரம், தூத்துக்குடி. | ரூ.4,75,569/– 1.16% மதிப்பீட்டு தொகையைவிட அதிகம் |

**(கோப்பு எண்.960/2019/இ1)**

<u>**அலுவலகக் குறிப்பு:**</u>

மதிப்பீட்டு தொகையை விட **0.32%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஏ.ஆர்.டி.இ. என்டர்பிரைசஸ், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

<u>**தீர்மானம் எண்.670 அனுமதிக்கப்பட்டது.**</u>

<u>**பொருள் :8**</u>

கீழக்கரை நகராட்சி TN65 S4101 ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளான சஸ்பென்சர் ஓவர் ஆயில், அல்பர் ஆம்ப், லோயர் ஆம்ப், புஸ் கிட், டியர் ராடு என்ட், ஸ்டேரிங் பால் ஜான்ட், பேக் அன்ட் பிரன்ட் சாக்கப்சர் மற்றும் என்ட் ஜாயின்ட் மற்றும் இதர பழுதுகளை சரி செய்வதற்கு இந்நகர்மன்றத்தில் **29.11.2019**–ந்தேதி அனுமதி பெற்று, அதனடிப்படையில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் **02.12.2019**–ந் தேதி வரப்பெற்ற கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தகாரர் / நிறுவனத்தின் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | என்.எஸ். ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ்,<br>202/3A பேராவூர் போஸ்ட்<br>தேவிப்பட்டினம் ரோடு<br>இராமநாதபுரம். | ரூ.41,862/–<br>(CGST & SGST உட்பட) |
| 2 | ஸ்ரீ விக்னேஷ் என்ஜினியரிங் ஒர்க்ஸ்<br>மஹர் நோன்பு திடல் அருகில்<br>கேணிக்கரை, தேவிப்பட்டினம் ரோடு<br>இராமநாதபுரம். | ரூ.45,809/–<br>(CGST & SGST உட்பட) |
| 3 | ஏ.ஆர். என்ஜினியரிங் ஒர்க்ஸ்,<br>16/7C ஏ.கே.எஸ். காம்ப்ளக்ஸ்,<br>பி.1 போலிஸ் ஸ்டேசன் அருகில்,<br>ஜி.ஹெச். ரோடு,<br>இராமநாதபுரம். | ரூ.48,168/–<br>(CGST & SGST உட்பட) |

(கோப்பு எண். 519/2019/ இ1)

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ.41,862/—க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள என்.எஸ்.ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், இராமநாதபுரம் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ரூ.41,168/—ஐ மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.671அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :9</u>**

கீழக்கரை நகராட்சி 2019—20 ஆம் ஆண்டிற்கான அலுவலக பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, பொதுசுகாதார பிரிவு, நகரமைப்பு பிரிவு பணியாளர்களுக்கு தேவையான எழுதுப்பொருட்கள், படிவங்கள் பதிவேடுகள், அச்சிடும் தாள்கள் போன்ற பொருட்கள் அங்கீரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனம் மூலம் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினமாக ரூ.3,00,000/—ற்கு 08.03.2019—ம் தேதி இந்நகர்மன்றம் அனுமதி வழங்கப்பட்டு, அதில் செலவினம் செய்தது போக தற்போது ரூ.95,708/— மட்டும் மீத இருப்பாக உள்ளது.

மேலும் கணினி உபகரணங்களுக்கு தேவையான டோனர்கள், கீபோர்டு மவுஸ் போன்ற பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினமாக ரூ.3,00,000/—ற்கு 08.03.2019—ந் தேதி இந்நகர்மன்றம் அனுமதி வழங்கப்பட்டு, அதில் ரூ.1,52,082/— மீத இருப்பாக உள்ளது. தற்போது அலுவலக உபயோகத்திற்கு அவசிய தேவையின் காரணமாக எழுதுப்பொருட்கள், படிவங்கள் பதிவேடுகள், அச்சிடும் தாள் மற்றும் கணினி உபகரணங்கள் போன்ற பொருட்கள் சிதம்பரனார் மாவட்ட அச்சக சேவை, தொழிற் கூட்டுறவு சங்கம், கோவில்பட்டி நிறுவனத்திடம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதில் ரூ.2,21,844/— (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்டுள்ள பட்டியல் தொகை ரூ. 2,21,844/— சிதம்பரனார் மாவட்ட அச்சக சேவை, தொழிற் கூட்டுறவு சங்கம், கோவில்பட்டி நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டியுள்ளதால், 2019—20 ஆம் நிதியாண்டிற்கு இந்நகர்மன்றம் அனுமதிக்கப்பட்ட தொகையை விட கூடுதல் செலவினம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இனிவரும் காலங்களில் எழுதுப் பொருட்கள் மற்றும் கணினி உபகரணங்கள் போன்ற பொருட்கள் கொள்முதல் செய்ய வேண்டியிருப்பின் அதற்கான கூடுதல் உத்தேச செலவின தொகை ரூ.2,50,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்பட்டுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. உத்தேச செலவினம் ரூ.2,50,000/— ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

2. அலுவலக பணிகளின் அவசர தேவையின் காரணமாக கூட்டுறவு நிறுவனம் மூலம் பொருட்கள் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.672அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள் :10**

**இந்நகராட்சியின் வளர்ச்சித் திட்டப்பணிகள் மாலைமுரசு நாளிதழ் வைரவிழா மலரில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு கட்டணம் ரூ.26,250/—க்கு பட்டியல் எண்.0202, நாள்.04.10.2019—ன்படியானது இந்நகராட்சிக்கு 09.12.2019—ம் தேதி வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் ரூ.26,250/—மட்டும் வழங்குவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது. (கோப்பு எண்.425/2017/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

**மாலைமுரசு நாளிதழ் வைரவிழா மலரில் விளம்பர கட்டணம் ரூ.26,250/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் எண்.673 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :12**

கீழக்கரை நகராட்சி பராமரிப்பில் உள்ள வார்டு எண்.1 புதிய பேருந்து நிலைய பின்புறம் உள்ள மாட்டுக் கொட்டகை, வார்டு எண்.16 புதுக்குடி மற்றும் வார்டு எண்.21 தட்டான்தோப்பு ஆகிய இடங்களில் கழிவு நீரேற்றும் நிலையம் அமைந்துள்ளது. மேற்படி கழிவு நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார் / ஆயில் ஆயில் என்ஜின்களை இயக்குவதற்கும், மேலும் அப்பகுதியில் அமைந்துள்ள கழிவு நீர் தொட்டிகளைப் பராமரிப்பதற்கும் இந்நகராட்சிக்கு பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படவில்லை. எனவே, பொது சுகாதார நலன் கருதி ஒரு கழிவு நீரேற்று நிலையத்திற்கு இரவு மற்றும் பகல் பணிக்கு இருவர் வீதம் 3 கழிவு நீரேற்று நிலையத்திற்கு ஆறு நபர்கள் மேற்படி பணிகளை செய்ய வேண்டியது அவசியமாகிறது.

இந்நகராட்சி நிர்வாக நலன் கருதி மேற்படி பணிகளான கழிவு நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார் / ஆயில் ஆயில் என்ஜின்களை இயக்குவதற்கும், மேலும் அப்பகுதியில் அமைந்துள்ள கழிவு நீர் தொட்டிகளைப் பராமரிப்பதற்கும் இந்நகர்மன்ற தீர்மான எண். 269 நாள்.30.11.2017 மற்றும் 308 நாள்.29.01.2018—ன்படி ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) தற்போது ஆறு நபர்களைக் கொண்டு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி நிர்வாக நலனைக் கருத்தில் கொண்டு, மேற்காணும் பணிகள் தொய்வின்றி தொடர்ந்து நடைபெறும் பொருட்டு இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏதுவாக 2019—20 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விலை விகித அட்டவணை வரிசை எண்.8(b) Pump operator without ITI பணிக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றிற்கு ரூ520/— வீதம் கழிவு நீரேற்று நிலையத்திற்கு ஆறு நபர்களை ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) பணி அமர்த்திக்கொள்ள 01.02.2020 முதல் 31.07.2020 வரை ஆறு மாதங்களுக்கு நிர்வாக செலவினம் 12 சதவீதம் உட்பட ரூ.6,40,000/—க்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி ஒரு கழிவு நீரேற்று நிலையத்திற்கு இரவு மற்றும் பகல் பணிக்கு இருவர் வீதம் 3 கழிவு நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார் / ஆயில் ஆயில் என்ஜின்களை இயக்குவதற்கும், மேலும் அப்பகுதியில் அமைந்துள்ள கழிவு நீர் தொட்டிகளைப் பராமரிப்பதற்கும் ஆறு நபர்களைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) பணி செய்யும் பொருட்டு அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி கோரப்பட்டுள்ளது. நகர் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.1010/2019/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு இந்நகராட்சி ஒரு கழிவு நீரேற்று நிலையத்திற்கு இரவு மற்றும் பகல் பணிக்கு இருவர் வீதம் 3 கழிவு நீரேற்று நிலையத்திற்கும் ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) பணி செய்ய ஆறு மாதங்களுக்கு ஆறு நபர்களை வழங்குவதற்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ.6,40,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் பணிக்குரிய செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.675 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :13</u>**

கீழக்கரை நகராட்சிப் பகுதிகளில் குழல் விளக்குகள்–135, உயர்மின் கோபுரம் 9 எண்ணம் விளக்குகளில் பொருத்தப்பட்டுள்ள 108 விளக்குகள், சோடியம் விளக்குகள்–154, CFL விளக்குகள்–627, LED 25w விளக்குகள்–242 ஆக மொத்தம் 1266 எண்ணம் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. அவை இந்நகர் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன. மேற்கண்ட தெரு விளக்குகளை பராமரிப்பதற்கு இந்நகராட்சிக்கு ஒரே ஒரு மின் பணியாளர் மற்றும் ஒரு மின்பணி உதவியாளர் பணியிடங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சிக்குட்பட்ட சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீரேற்றம் நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்களையும், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள 3 எண்ணம் கழிவு நீரேற்றும் நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டர்கள்/ ஆயில் என்ஜின்களை நல்ல முறையில் பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டியுள்ளது. இந்த பணிகளை செய்வதற்கு இந்நகராட்சிக்கு பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படவில்லை. ஆனால் இந்நகராட்சி தெரு விளக்கு பராமரிப்பு, குடிநீர் மின்மோட்டார் மற்றும் கழிவு நீர் மின்மோட்டர்கள்/ ஆயில் என்ஜின்களை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி மின்பணியாளரின் உதவிக்கு கூடுதலாக ஒரு உதவியாளரைக் கொண்டு பணி செய்ய வேண்டியது அவசியமாகிறது.

ஆகவே, இந்நகராட்சி நிர்வாக நலனை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணிகளான தெரு விளக்கு பராமரிப்பு, குடிநீர் மின்மோட்டார் மற்றும் கழிவு நீர் மின்மோட்டர்கள்/ ஆயில் என்ஜின்களை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர்மன்ற தீர்மான எண். 268 நாள்.30.11.2017 மற்றும் 285 நாள்.29.12.2017–ன்படி கூடுதலாக ஒரு உதவியாளரைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) தற்போது பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நிர்வாக நலனைக் கருத்தில் கொண்டு மேற்காணும் பணிகள் தொய்வின்றி தொடர்ந்து நடைபெறும் பொருட்டு இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏதுவாக 2019–20 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விலை விகித அட்டவணை வரிசை எண்.56 Electrical Helper for Maintenance of Street Light பணிக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றிற்கு ரூ422/– வீதம் நிர்வாக செலவினம் 12 சதவீதம் உட்பட இந்நகராட்சி தெரு விளக்குகள் பராமரிப்பு பணிகளை ஒரு நபரைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) பணி அமர்த்திக்கொள்ள ஆறு மாதங்களுக்கு 01.02.2020 முதல் 31.07.2020 வரை ரூ.87,000/–க்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி கோரப்பட்டுள்ளது. நகர் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.1027/2019/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) இந்நகராட்சி நிர்வாக நலனை கருத்தில் கொண்டு தெரு விளக்குகளை பராமரிப்பு குடிநீர் மின்மோட்டார் மற்றும் கழிவு நீர் மின்மோட்டார்கள் / ஆயில் என்ஜின்கள்

பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி மின்பணியாளரின் உதவிக்கு கூடுதலாக ஒரு உதவியாளரைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) பணி செய்ய ஆறு மாதங்களுக்கு ஒரு நபர் வழங்குவதற்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ.87,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் பணிக்குரிய செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.676 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :14</u>**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர், அவர்களின் கடிதம் ந.க.எண்.195/செமதொ/2019 நாள்.06.11.2019—ன்படி, இந்நகராட்சியின் வளர்ச்சித் திட்டப்பணிகள் தினகுரல் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு கட்டணம் ரூ.36,000/— பட்டியல் எண்.426, நாள். 29.11.2019—ன் படியானது இந்நகராட்சிக்கு 30.12.2019—ந் தேதி வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் ரூ.36,000/— மட்டும் வழங்குவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.425/2017/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

தினகுரல் நாளிதழ் விளம்பர கட்டணம் ரூ.36,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.677 அனுமதிக்கப்பட்டது.</u>**

**ஒம்/— ஆ. தனலெட்சுமி,பி.காம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**